DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 22/2017 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 1 |

| | |
|---|---|
| Name | பஞ்சவள்ளி |
| Father / Husband Name | காமாட்சி |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 19th July 2022.

------------------------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை:-

நான் கீழவளையம்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகின்றேன். வழக்கு எதிரிகள் பழனி, ஆறுமுகம் பங்காளி குடும்பத்தினர்கள். எங்கள் குடும்பத்திற்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் ஏற்கனவே இடப்பிரச்சனை உள்ளது. தேதி, மாதம், வருடம் தெரியாது. சிவக்கண்மாய் அருகில் எனது கணவர் காமாட்சி சென்று கொண்டிருந்த போது எதிரி பழனி எனது கணவரை வழிமறித்து சண்டை போட்டு இடத்திற்குள் வந்தால் கொன்றுவிடுவேன் என்று மிரட்டி கட்டையை வைத்து எனது கணவரை அடித்துள்ளார். பழனியின் மனைவியும் எனது கணவரை தாக்கியுள்ளார். ஊர்க்காரர்கள் வந்து தகவல் சொன்னவுடன் நானும், என் பிள்ளை, ஊர்க்காரர்கள் நிறைய பேர் சென்று பார்த்தோம். எனது கணவரை விசாரித்த போது எதிரிகள் இருவரும் அடித்து காயப்படுத்தியதாக சொன்னார். எனது கணவருக்கு மண்டையில் அடிபட்டு இரத்தம் ஓடியது. அவசரமாக அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மருத்துவனையில் வைத்து போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

எனது கணவருக்கு காயம் ஏற்பட்டது சம்பந்தமாக யார் புகார் கொடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது கணவருக்கும், எதிரிகளுக்கும் ஏற்கனவே சொத்து பிரச்சனை காரணமாக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். விசாரித்தவர் பெண் போலிசா, ஆண் போலிசா என்றால் ஞாபகமில்லை. என் கணவர் அன்னத்தானத்தில் சென்று சாப்பிடுவாரா என்றால் அவ்வப்போது சாப்பிடுவார். கோவிலில் உட்கார்ந்து காசு கேட்பாரா என்றால் இல்லை. எனது கணவருக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது கணவர் பசியின் காரணமாக சைக்கிள் ஓட்ட முடியாமல் கீழே விழுந்ததில் காயம் ஏறப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு எனது கணவரும், மகனும் எதிரியின் குடும்பத்தை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளால் எனது கணவருக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 19.07.2022**

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.